# 10 ஆலய வழிபாடு - II



எமது வழிபாட்டு முறைகள் அறிவியல் ரீதியானவை என்றும் உயர்ந்த பயனுடையவை என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விளக்கங்கள் சிலவற்றை இப்பாடத்தில் காண்போம்.

## வழிபாட்டில் அறிவியல்

நாம் ஆலயத்திற்குச் செல்லும்போது நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து செல்வதும், ஆலயத்தினுள்ளே செல்லுமுன் கை, கால் கழுவிச் செல்வதும் நாமும் நமது சூழலும் சுத்தமாக விளங்குவதற்கு அடிப்படைகளாக அமைகின்றன.

ஆலயத்தில் குறைந்தது மூன்று முறை அல்லது ஐந்து முறை வீதியை வலம் வந்து வணங்குதல் வேண்டும் என்பர். இவ்வாறு செய்வதால் எமது பாதத் தின் அடிப்பாகத்தில் இருக்கும், உடலை இயக்கும் நரம்புகளின் முடிச்சுக்கள் தூண்டப்படும்.

மனமும் உடலும் இறுக்கம் நீங்கித் தளர்வடையும். வலப்பக்கமாக வலம் வருவதால் எமது உடலின் ஆறு ஆதார ஸ்தானங்களான மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பனவற்றில் சமநிலை பேணப்படும்.

ஆலயத்தில் இறைவனை வழிபடும்போது இருகரங்களையும் ஒன்று சேர்த்து (குவித்து) வணங்குவதால் தோள்மூட்டு, முழங்கைமூட்டு, மணிக்கட்டு ஆகியவை பலமடைவதுடன் சீரான இரத்த ஓட்டமும் நடைபெறுகின்றது. பிரபஞ்ச சக்தியும் கூப்பிய விரல்களினூடாக உள்ளீர்க்கப்படுகின்றது.

விநாயகரை வணங்கும்போது கைகளை முஷ்டியாகப் பிடித்து சிரசில் குட்டிக் கும்பிடுவதனாலும், இடது காதை வலது கையினாலும் வலது காதை இடது கையினாலும் பிடித்துத் தோப்புக்கரணம் இடுவதனாலும் சிரசிற்குச் செல்லும் நரம்புகள் தூண்டப்பட்டு சிரசிற்குரிய இரத்த ஓட்டம் சிறப்பாக அமைகின்றது.

அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என்பன மார்புக்கும் அதன் மேலுள்ள உறுப்புகளுக்கும் சுவாசத்துக்கும் சிறந்த பயிற்சியாக அமையும்.

ஆலயங்களில் தல விருட்சங்களாக அரசு, ஆல், வேம்பு, மா, வன்னி, வில்வம் போன்றவை விளங்குகின்றன. இவற்றை நாம் வலம் வரும்போது அவற்றிலிருந்து வெளியேறும் மூலிகைக்காற்றானது எமது உடலிற்கு மிகுந்த ஆரோக்கியத்தை வழங்குகின்றது.

## கிரியைகளில் அறிவியல்

ஆலயக் கிரியைகளில் ஹோமங்கள் நடைபெறுகின்றன. அவற்றிற்கு அரசு, மா, பலா, ஆல், எருக்கலை போன்ற மூலிகைப்பொருட்கள் இடப்படுகின்றன. இவற்றின் புகையும் கர்ப்பூரம் எரிக்கப்படும் போது வெளிவரும் புகையும் மணமும் சூழலைத் தூய்மையாக்குகின்றன; சுவாசிப்பவர்களுக்கு நோய்தீர்க்கும் மருந்தாகவும் அமைகின்றன.

ஆலயங்கள் பெரும்பாலும் மின்காந்த அலைகள் அதிகம் இருக்கும் இடங்களிலேயே அமைக்கப்படுகின்றன. ஆலயங்களின் விமானங்கள், கோபுரங்கள் என்பவற்றின்மேல் கலசங்கள் அமைக்கப்படுகின்றன. இவை மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியைக் கொண்டுள்ளன. நாம் ஆலயத்தினுட் சென்று வழிபடும்போது இந்த சக்தி நமது உடலிலும் சேர்கின்றது. இதனால் நமக்குப் புத்துணர்வு, உள்ளத்தூய்மை, நோய் எதிர்ப்புச் சக்தி என்பவை கிடைக்கப் பெறுகின்றன.

## *பயிற்சி*

*1. ஆலயத்திற்கு நாம் ஏன் சுத்தமாகச் செல்ல வேண்டும்?*

*2. ஆலயத்தை வலம் வந்து வணங்குவதால் ஏற்படும் நன்மை யாது?*

*3. தலவிருட்சத்தின் பயன் யாது?*

*4. கோபுரங்களில் கலசங்கள் ஏன் அமைக்கப்படுகின்றன?*

## குழுச் செயற்பாடு

*ஆலய வழிபாட்டிற் காணப்படும் மேலதிக அறிவியல் விடயங்களைத் தேடிப் பெற்று வகுப்பறையில் சமர்ப்பியுங்கள்.*